2012 பிப்ரவரி 2]

அரசால் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

28—

தரம் உயர்த்துதல்

***6211—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராமப்புற மக்களின் நல்வாழ்வினைக் கருத்தில்கொண்டு, கடந்த மாதம் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்கி வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 38 ஆரம்ப சுகாதார நிலையங்களை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தி அனுமதியும் வழங்கியுள்ளார்கள்.*

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற கள்ளிக்குடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகள் வசதியுடன் விரிவாக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையின்மூலம் தொடங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2012 பிப்ரவரி 2

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

முற்பகல் 11–10

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏழு மாத காலத்தில் மக்களின் எண்ணங்களையெல்லாம் நிறைவேற்றுகிற வகையிலே தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக, என்னுடைய தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் தொகுதி மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்பகுதி சென்னை–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிற காரணத்தினால், பல நேரங்களிலே விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு அங்கே வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றிய மக்கட்தொகை 68,263 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் கள்ளிக்குடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுகிறது. மேலும், கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கூடக்கோவில் மற்றும் வில்லூர் ஆகிய ஊர்களிலும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. இன்றைக்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே பிரசவ பின் கவனிப்பு அறை கட்டுவதற்கு ரூ.8.80 இலட்சம் மதிப்பீட்டில் தேசிய ஊரக நலத் திட்டத்தின்கீழ் நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார். அது கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

2012 பிப்ரவரி 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, சுந்தரபாண்டியபுரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது 2 படுக்கைகள்தான் இருக்கின்றன. அதை 30 படுக்கைகளுடன் தரம் உயர்த்துவதற்கு அரசு ஆவன செய்யுமா? தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வசதி பல ஆண்டுகளாக இல்லாத சூழ்நிலை இருந்து வருகிறது. அங்கிருந்து மக்கள் இதற்காக நெல்லைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால், அங்கு சி.டி. ஸ்கேன் வசதியும் செய்து கொடுக்க முடியுமா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளின்படி ஒரு வட்டாரத்தில் ஒரு பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தைத்தான் மேம்படுத்த இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம் இந்த விதிக்கு உட்பட்டிருந்தால், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக உயர்த்த மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கனிவுடன் பரிசீலிக்கும். மேலும், தென்காசியிலே, சி.டி. ஸ்கேன் வசதி கேட்டிருக்கிறீர்கள். அது கண்டிப்பாகப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No more sub-questions. *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

29—

சொந்தக் கட்டடம்

***661—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—